★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆடி 26 ஷவ்வால் 1 இதழ் 179

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 11—8—83

★ தமிழக பாத யாத்திரை:

## 'இலங்கையை அடைந்தால் தகுந்த நடவடிக்கை!"

### ஜனாதிபதி ஜே. ஆர். எச்சரிக்கை

(கொழும்பு)

''இலங்கைப் பிரச்னை தொடர்பாக மதுரையிலிருந்து இலங்கை போகப்போவதாகக் கூறி ஆரம்பமாகியிருக்கும் பாதயாத்திரை இலங்கையை அடையுமானால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன எச்சரித்துள்ளார்'

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன இதுபற்றி அரச பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''மதுரையிலிருந்து இலங்கை செல்லப்போவதாக தமிழக அரசியல்வாதிகள் சிலர் பெரும் பாதயாத்திரையை ஆரம்பித்துள்ளனர். இப்பாத யாத்திரை இந்திய எல்லையை அடைந்ததும் தடுத்து நிறுத்தப்படுமென்று இந்திய அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

''இருப்பினும் அப்பாதயாத்

(2-ம் பக்கம் பார்க்க)

# 10 நாட்களில் 20,000 அகதிகள்

# 15 கப்பல்களில் வந்தனர்!

## சிதம்பரமும் வந்து சேர்ந்தது!

(யாழ்ப்பாணம்)

**நேற்றுவரை பதினைந்து கப்பல்களில் கொழும்பிலிருந்து 17,299 அகதிகள் இங்கு வந்து சேர்ந்துள்ளனர்.**

கடந்த முதலாம் திகதியிலிருந்து நேற்றுவரை கப்பல்கள், ரயில்கள்மூலம்வந்த அகதிகள் தொகை சுமார் 20,000 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 'சிதம்பரம்' என்ற இந்தியக் கப்பலில் 1600 அகதிகள் வந்து சேர்ந்தனர். இதுவே கடைசியாக வந்த கப்பலாகும்.

இக் கப்பல் இந்தியாவில் இருந்து கொழும்புதுறைமுகத்திலுள்ளஎலிஸபெத்மகாராணியார் இறங்குதுறையை நேற்று முன்தினம் அடைந்தது. இதில் இந்திய அரசு அறுபதினாயிரம் தொன்கள்உதவிப்பண்டங்களையும் இலங்கைக்கு அனுப்பி வைத்திருந்தது.

இப்பண்டங்களை இந்திய தூதுவர் திரு. சாட்வால், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திரு. பிரட்மன் வீரக்கோனிடம்கையளித்தார். இக்கையளிப்பையடுத்து 'சிதம்பரம்' கப்பலின் காப்டன், மற்றும் இலங்கைதுறைமுக அதிகாரசபை உயர் அதிகாரிகள், இந்திய தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்துரையாடினர்.

'சிதம்பரம்' பயணிகள்கப்பல் இந்தியாவின் அதிக வசதிகள் கொண்ட பயணிகள் கப்பல்களில் முக்கியமானது. சென்னை பம்பாய் துறைமுகங்களிலிருந்து தென்கிழக்கு பகுதிகளுக்கே இக்கப்பல் தனது சேவைகளை நடாத்துவது வழக்கம். சிலவருடங்களுக்கு முன்னர் திருகோணமலைதுறைமுகத்திலிருந்தும் இக்கப்பல் தென்கிழக்காசிய சேவையை நடாத்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

கலவரங்களினல் பாதிக்கப்பட்டவர்கள் கொழும்பிலுள்ள பல முகாங்களில் தங்கியிருந்தனர். இவர்களைக் கப்பல்கள் மூலம் அனுப்பும் வசதிசெய்யப்பட்டது.

நேற்று முன்தினம் இரண்டு ரயில்களில் அகதிகள் ஆயிரக்கணக்கில் வந்துசேர்ந்தனர்.

விமானங்கள், பஸ்கள் தனி

(4-ம் பக்கம் பார்க்க)

## வவனியா வந்துசேரும் அகதிகள்

(வவனியா நிருபர் ரி. விவேகராசா)

கொழும்பு, கண்டி, மற்றும் பல இடங்களிலிருந்து தனியார் பஸ்கள்மூலம் வவனியா வரை வந்து சேரும் அகதிகளுக்காக வவனியா சைவப் பிரகாச வித்தியாசாலையில் அகதிகள் முகாம்ஒன்று நேற்று அமைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் 17 தனியார் வாகனங்களில் வவனியாவிற்கு சுமார் 2000 அகதிகள் வந்து சேர்த்தனர். இத்தனியார் வாகனங்கள் வவனியாவிற்கு அப்பால் செல்ல மறுத்ததைத் தொடர்ந்து வவனியாவில் ஒரு தற்காலிகமுகாம் அமைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

வவனியா உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. குணநாயகத்தின் ஏற்பாட்டின்படி இந்த முகாம் அமைக்கப்பட்டது. வங்கி, நீர்ப்பாசன மற்றும் அரசாங்க ஊழியர்களும், ஆசிரியர்களும், தொண்டர்களும் இங்கு வந்து சேரும் அகதிகளுக்கான உதவிகளைச் செய்துவருகின்றனர்.

வவனியாவிலிருந்து அகதிகள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றது.

அகதிகள் முகாமிற்குச் சென்ற வவனியா எம்.பி. திரு. ரி. சிவசிதம்பரம், இவர்கள் யாழ்ப்பாணம் செல்வதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் மினி பஸ்களும், இ. போ. ச. பஸ்களும் உடனடியாக உதவ வேண்டுமென்றும்

(4-ம் பக்கம் பார்க்க)

## எண்ணை ரயில் யாழ். வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவின் அவசர வேண்டுகோளைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திற்கு எரிபொருட்கள் தொடர்ந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நேற்றுக் காலை எண்ணை ரயிலில் 60,000 கலன் டீசலும், 20,000 கலன் மண்ணெண்ணையும், 10,000 கலன் பெற்ரோலும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது. (க)

## வவனியா மாவட்டசபை உறுப்பினர் ராஜினமா!

(வவனியா)

வவனியா மாவட்ட அபிவிருத்திசபையின் ஐக்கிய தேசியக்கட்சி இரண்டாவது உறுப்பினரான திரு. தம்பாபிள்ளை பரமநாதன் நேற்று பதவியை ராஜினமா செய்துள்ளார்.

26 AUG 1983

## சேதங்களை மதிப்பிட செஞ்சிலுவைபிரதிநிதிகளுக்கு அனுமதி மறுப்பு!

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் இருபிரதிநிதிகளுக்கு சேதமடைந்த உடமைகள் பற்றிய மதிப்பீடுகளை நடத்த அரசாங்கத்தினல் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த இருபிரதிநிதிகளும், செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் எத்தகைய உதவிகளை வழங்கலாமென அறியும் வகையிலேயே பாதிப்படைந்த உடமைகள் பற்றிய மதிப்பீடுகளை நடத்த இலங்கை அரசிடம் அனுமதி கோரியிருந்தனர்.

இராணுவ நடவடிக்கைகள், இயற்கை அழிவுகள் என்பன

(2-ம் பக்கம் பார்க்க)

## "அரச உடைமையாக்கப்பட்டவை விரைவில் உரியவர்களிடம் திருப்பிக் கொடுக்கப்படும்!'

### ஜனாதிபதி தகவல்

(கொழும்பு)

''அரசாங்க உடைமையாக்கப்பட்ட சகல தனியார் சொத்துக்களும் புனர்நிர்மாண வேலைகள் முடிவடைந்ததும் உரியவர்களிடம் விரைவில் திருப்பிக் கொடுக்கப்படும்'' என்று ஜனாதிபதி ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

''புனர்நிர்மாண வேலைகளை விரைவில் செய்துமுடிக்கவும், நகர்ப்புற அதிகார சபையின் ஆலோசனையின்கீழ் சேதமாக்கப்பட்ட கட்டிடங்களுக்குப் பதிலாகப் புதியவற்றைக் கட்டியெழுப்பும் வகையிலுமே அரசு சேதமடைந்த சகல தனியார் கட்டிடங்களையும் தனது உடைமையாக்கியுள்ளது. எனவே இக்கட்டிடங்களின் புனர்நிர்மாணவேலைகள் முடிவடைந்ததும் உரியவர்களிடம் அவை திருப்பிக்கொடுக்கப்படும். அரசாங்கத்துக்கு அவற்றைச் சுவீகரிக்கும் நோக்கம் கிடையாது'' என்ருர்.

சுயநலம் கொண்டவர்களால் சேதமாக்கப்பட்ட கட்டிடங்கள் சுவீகரிக்கப்படாதிருக்கும் வகையிலும், அக்கட்டிடங்களில் முன்பு இருந்தவர்கள் திருத்தியமைக்கப்பட்ட பின்னரோ அல்லது அதற்கு முன்னரோ பலாத்காரமாக எழுப்பப்படாதிருக்கும் வகையிலும்

(4-ம் பக்கம் பார்க்க)

## நுவரெலியா பகுதி அகதிகள் ஒன்பது பஸ்களில் வந்தனர்!

(யாழ்ப்பாணம்)

நுவரெலியாவிலிருந்து ஒன்பது போக்கு வரத்துச்சபை பஸ்களில் அகதிகள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்! கடந்த சில நாட்களாக நுவரெலியா முகாமிலிருந்த சுமார் ஆயிரம் அகதிகளும், இந்த பஸ்களில் விசேஷ பாதுகாப்புடன் வந்து சேர்ந்தனர்.

நுவரெலியா பகுதியில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்தவர்கள் இந்த ஒன்பது பஸ்களில் கொண்டுவரப்பட்டனர்.

ஆசிரியர்கள், டாக்டர்கள், என்ஜினியர்கள், கிளார்க்குகள் மற்றும் வர்த்தகர்கள் போன்ற பல்வேறுபட்டவர்கள் இந்த அகதிகளில் அடங்குவர்.

நுவரெலியாப் பகுதியிலிருந்து வந்த இந்த அகதிகளுக்கு கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட விசேஷ இராணுவ பிரிவினர் பாதுகாப்பு வழங்கினர்.

கடந்த திங்கட்கிழமை நுவரெலியாவிலிருந்து புறப்பட்ட இந்த ஒன்பது பஸ்களும், கண்டியில் இரவு தரித்து நின்று செவ்வாய் அதிகாலை புறப்பட்டு வந்தது. கண்டி பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில், அகதிகளுக்கு இரவுஉணவு வழங்கப்பட்டது.

வவனியா நகரமண்டபத்திலும் அகதிகளுக்கு இரவுஉணவு

[4-ம் பக்கம் பார்க்க)

## செய்தித் தணிக்கை அமுல்

கடந்த மாதம் 20ம் திகதி முதல் பயங்கரவாதம் சம்பந்தமான செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் ஒவ்வொரு செய்தியும் தணிக்கை அதிகாரியின் அனுமதி பெற்றே பிரசுரமாகிறது.

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

(British Layland Flat Lorry) 27 ஸ்ரீ 1035 லெய்லண் தட்டு லொறி நீளமான செசி உடையது துறைமுக வேலை கட்டும் மரம் ஏற்றுவதற்கும் உகந்தது. N. C. குருநாதர், 64/1, ஸ்ரேஷன் லேன், பருத்தித்துறை ரோட், யாழ்ப்பாணம். 8157

---

சாவகச்சேரி பஸ்நிலையத்தில் இருந்து 200யார் தூரத்தில் சிவன்கோவில் வீதியில் மூன்றரைப்பரப்பு காணி சிறிய வீடு, கிணறு, மலசலகூடம் ஆகிய வசதியுடன் விற்பனைக்குண்டு., விபரங்களுக்கு: பொ. இந்திரராஜா சிவன்கோவில் வீதி, சாவகச்சேரி. 8153

---

### தேவை

மணமகள் தேவை. யாழ். இந்து வேளாள 35 வயதுடைய வெளிநாட்டில் உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவருக்கு இதே இனத்தைச் சேர்ந்த 28 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். முதற் கடிதத்திலேயே விபரங்களைத் தெரிவிக்கவும். கடிதமூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 8160, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 8160

---

### தவறிவிட்டது

இலக்கம் 94352 கார் சாரதி பத்திரம், காப்புறுதிப்பத்திரம், 1983 வரிப்பத்திரம் 8-8-1983 கீரிமலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். டாக்டர் அ. கிருஷ்ணசாமி ஐந்துசந்தி, யாழ்ப்பாணம். 8146

---

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய

## அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் இல: 86, கண்டி வீதி, ஐயாத்துரை விஜயதர்மா என்பவரின் மரணசாதன மில்லாச் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

ஐயாத்துரை விஜயதர்மாகைம் பெண் சந்திரவதனு இல:86, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல: 3741

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983ம் ஆண்டு ஆவணிமாதம் 12 ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றுர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**தா. குலஞானம்**
பதிவாளர்.

1983ம் ஆண்டு ஆனி மாதம் 23ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 8149

---

### CLASSES

All classes- I. C. M. A. Prof II, Prof I Sections A and B; Chartered Licentiate and Prelim-interrupted by the Curfew resume from Saturday the 13th August 83- Vanniasingham, Vairavar Kadadcham, Palaly Road, Thirunelvely, Jaffna. Phone 24424. (8158)

---

### WANTED

Available immediately experienced Accounts Clerk- worked in Colombo Firm. Miss Devika Rajoo c/o Supdt. of Excise, Kandy Road, Jaffna. 8156

---

## முக்கிய அறிவித்தல்

## மின்விநியோகம்

1983ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் பகல் 12-00 மணி வரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும்பொருட்டு அநுராதபுரம் - யாழ்ப்பாணம் 132 கே. வி. மின் மார்க்கம் துண்டிக்கப்படவிருப்பதால் கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், துணுக்காய், முல்லைத்தீவு, சுன்னுகம், காங்கேசன்துறை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, வேலணை போன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி, யாழ். பிரதேசங்களில் பெரும்பாலான பகுதிகள் மின்சார விநியோகம் தடைப்படும் என அறியத்தருகின்றேன்.

**மின் பொறியியலாளர்**
(யாழ். பிரதேச அலுவலகம்)
இலங்கை மின்சாரசபை
சுன்னுகம்.

(8161)

---

### அறிவித்தல்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில் நுட்பநிறுவனம் தவணை விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளது. இரண்டாம் தவணை வகுப்புகள் ஆவணி 24ம் திகதி புதன்கிழமை ஆரம்பமாகும்.

இயக்குனர்

8159

---


## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ளதும், தனியான பாவிப்பிலுள்ளதுமான இசுசு பயணிகள் ஏற்றும் வான் விற்பனைக்குண்டு.

**இல. 27 ஸ்ரீ 4891**

கொக்குவிலிலுள்ள எமது பண்டகசாலையில் வாகனத்தை பார்வையிடலாம்.

**மகாராஜா இன்வெஸ்ட் மென்ட் லிமிட்.**

122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24267


---

# 'அத்தியாவசிய விடயங்கள் அனைத்தும் பேசப்படும்'

## புதுடில்லியில் 'எச். டபிள்யூ.'

புதுடில்லி, ஆக. 10

''இந்தியப்பிரதமருடன் அத்தியாவசியமானவை என்று கொள்ளப்படும் சகல விடயங்கள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்படும்'' என்று இலங்கை அரசின் விசேட பிரதிநிதியாக இந்தியப்பிரதமருடன் உரையாட புதுடில்லி வந்திருக்கும் திரு. எச். டபிள்யு. ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

திரு. ஜயவர்த்தன நேற்று முன்தினம் புதுடில்லி வந்து சேர்ந்தபோது பிரதமர் இந்திராவின் செயலாளர் திரு. அலெக்ஸண்டர், வெளிநாட்டமைச்சு செயலாளளர் திரு. வாஜ்பேய் ஆகியோர் அவரை வரவேற்றனர்.

இதனைத்தொடர்ந்து நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தமது பேச்சுக்களில் இலங்கைக்கு தேவைப்படும் உதவிப்பணிகள் குறித்தவிடயமும் முக்கிய இடம் பெறும் என்று திரு. ஜயவர்த்தன தெரிவித்தார்.

வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்ராவ், நிதியமைச்சர் திரு. பிரணப் முகர்ஜி ஆகியோரையும் திரு. ஜயவர்த்தன சந்திப்பார்.

இந்திய மத்திய அரசில் ஒரேயொரு தமிழ் அமைச்சரும், சிரேஷ்ட இந்திய அரசியல் வாதியுமான பாதுகாப்பமைச்சர் திரு. ஆர். வெங்கடராமனுடனும் திரு. ஜயவர்த்தன பேச்சு நடத்துவார் என்று தெரிவிக்கப்பட்டது. [கி]

---

### செஞ்சிலுவை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வற்றுல் சேதமாக்கப்பட்டவை குறித்து மதிப்பீடுகளை மேற்கொள்ளும் அதிகாரத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது பிரதிநிதிகளுக்கு வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையிலேயே இலங்கையிலும் இந்த இரு பிரதிநிதிகளும் அனுமதிகோரியிருந்தனர் ஆயினும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தலைவர், இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சேதங்கள் அரசாங்கத்துக்கு கட்டுப்படாத விஷமச் சத்திகளாலேயே மேற்கொள்ளப்பட்டதால் இவைபற்றி செஞ்சிலுவைச்சங்கம் அதிக அக்கறை காட்டத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளார்,

இதனையடுத்தே வெளிநாட்டமைச்சு இந்த இருபிரதிகளுக்கும் அனுமதி மறுத்துள்ளது. அத்துடன் இவர்கள் நாட்டிலிருப்பதும் அவசியமற்றதெனத் தெரிவித்துள்ளது. (கி)

---

அமெரிக்க

## இராணுவ நடமாட்டம் குறித்து ஐ. நா.வில் லிபியா புகார்!

திரிப்பொலி, ஆக. 10

ஐ. நா. பாதுகாப்புச்சபையில் அமெரிக்காவின் இராணுவ நடமாட்டம் தனக்கு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதாக லிபியா முறையிட்டுள்ளது. இத்துடன் இவ்விவகாரம் பற்றி விவாதிக்கும்படியும் கோரியுள்ளது.

'ஐசனேவர்' என்ற விமானந் தாங்கிக் கப்பல் உட்பட பல போர்க்கப்பல்களை அமெரிக்கா லிபியாவுக்கருகில் நிறுத்தி வைத்துள்ளது என்றும், தனது அயல்நாடான சூடானுக்கு வேவுபார்க்கும் விமானங்களை அமெரிக்கா வழங்கியுள்ளதென்றும் லிபியா தனது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளது.

எகிப்து, சூடான், ஓமான் ஆகியன அமெரிக்காவுடன் கூட்டாக பெரும் இராணுவ ஒத்திகைகளை நடத்துமானுல் அவ்ஒத்திகை தன்னை மிரட்டுவதாக இருக்குமென்றும் அதுகூறியுள்ளது. (கி)

---

கைப்பணி

## போதனுசிரியர்களுக்கு ஒரு மாதகாலம் லீவு!

(வண்ணுர்பண்ணை)

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் பனை அபிவிருத்திச்சபையின் சகல கைப்பணிப் போதனுசிரியர்களுக்கும், இச்சபை ஒருமாதகாலம் லீவு கொடுத்துள்ளது.

நாட்டின் தற்போதுள்ள நிலைமைகளால் பயிற்சி வகுப்புகளுக்கு பயிற்சியாளர்கள் வரவு குறைவாக இருப்பதால் இந்த திடீர் லீவு உத்தரவு சகல போதனுசிரியர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச்சபையின் உற்பத்தி உத்தியோகத்தர் திரு. எம். பி. ஜெகநாதன் இது தொடர்பான கடிதத்தை போதனுசிரியர்களுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இப்பயிற்சிகளை செப்டம்பர் மாதம் 1ம்தேதி வரை நிறுத்தி வைக்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சபையால் நிரந்தரமாக்கப்பட்ட போதனுசிரியர்கள் இக்காலத்தில் சபை அலுவலகத்தில் கடமையாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)

---

## சாட் வடபகுதியில் 'நேபாம்' குண்டு வீச்சு!

### ஆயிரக்கணக்கான குடிமக்கள் பலி!

பாரிஸ், ஆக. 10

ஆபிரிக்காவில் 'சாட்' நாட்டின் வடபகுதியில் இந்த நாட்டு ஆட்சியாளருக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் 'நேபாம்' குண்டுகளை வீசியுள்ளனர் இவ்வீச்சினுல் ஆயிரம் குடிமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

லிபியா அரசாங்கத்தின் உதவியுடனேயே இக்குண்டு வீச்சு நடந்ததாக 'சாட்' ஆட்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இக்குண்டுவீச்சுக்காக லிபியாவே விமானங்களைக் கொடுத்துதவியதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

லிபியா அரசாங்கம் தன்மீது சுமத்தப்பட்டுள்ள இக்குற்றச்சாட்டை மறுத்துள்ளது. இருந்தபோதிலும் லிபியா சாட் கிளர்ச்சியாளர்களுக்கு உதவிகள் புரிவது பகிரங்கமாகியுள்ளது.

சாட்டில் அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சிகள் தீவிரமடைந்துள்ளதையடுத்து பிரான்ஸ் அரசாங்கம் சாட் அரசாங்கத்துக்கு ஆதரவாக தனது இராணுவப் பிரிவொன்றை சாட் செல்லும்படி பணித்துள்ளது. (கி)

---

### இலங்கையை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரைக்காரர்கள் அத்தடையையும் மீறி இலங்கை மண்ணில் மிதிப்பார்களானுல் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் எடுக்கும்'' என்றுர்.

''தமிழக அரசியல் பிரமுகர்கள் சிலர் இலங்கையில் நடைபெற்ற கலவரங்கள் தொடர்பாக மதுரை நகரிலிருந்து பாதயாத்திரையொன்றை ஆரம்பித்து ராமேஸ்வரம் ஊடாக இலங்கைவரை அதை நீடிக்கப் போவதாக அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (கி)

---

### கம்பளை முகாமில் பிரசவம்

(கொழும்பு)

கம்பளை - பண்டாரநாயக்கா மகாவித்தியாலயத்திலிருந்த அகதிகள் முகாமில் பெண் ஒருவர் பெண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்துள்ளார்.

முகாமில் தங்கியுள்ள டாக்டர்களும், செஞ்சிலுவைச் சங்கத்தினரும் பிரசவத்துக்கு உதவி புரிந்தனர். (இ-மா)

# கிளிநொச்சி திரேசா மகளிர் பாடசாலை வளர்ச்சி

(பரந்தன்)

கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரி ஆண்டு தின விழா அதிபர் செல்வி ராதா சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. அதிபர் கடந்த ஓராண்டு காலத்தில் நடந்த விசேட நிகழ்ச்சிகளைப் பற்றி தமது அறிக்கையில் சமர்ப்பித்தார்.

இக்கல்லூரியில் இருபத்தி நான்கு வகுப்புகள் தற்போது நடைபெறுவதாயும் வர்த்தகம், மனைப்பொருளியல், அழகியற்கலை ஆகியவற்றிற்கு மேல் வகுப்புகள் நடத்துவதற்கு ஆசிரியர்கள் வேண்டுமென்றும் கிளிநொச்சியை ஆசிரியர் பற்றுக்குறை வாட்டியபோதும் திரு. வி. ஆனந்தசங்கரி எம். பி. உதவியால் இக்கல்லூரியில் ஆசிரியர் பற்றுக்குறை பெரிதளவு நீங்கியுள்ளதென்றும், இப்பாடசாலையில் 1982 டிசம்பர் க. பொ. த. சாதாரண பிரிவில் 21 மாணவிகளும், க.பொ. த. உயர்தர பிரிவில் பதின்மூன்று மாணவிகளும் சித்தியெய்தினரெனவும், சென்ற ஐந்தாண்டுகாலம்தான் இக்கல்லூரியுடன் பிணைக்கப்பட்டு தெய்வகடாட்சத்தால்முன்னேற்றப் பாதையில்செல்வதாகவும் தமக்கு எம். பி. திரு, ஆனந்தசங்கரி உறுதுணையாக நின்று ஆற்றிய உதவிகளுக்கு நன்றியும் கூறினர்.

கல்லூரி வளர்ச்சிக்கு கிளிநொச்சி நிறுவனங்கள் பலநிதி உதவி வழங்கின.

இவ்விழாவிற்கு பிரதம அதியாக சமூகம் கொடுத்த கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியையும், விசேட விருந்தினரான யாழ். கல்வி திணைக்கள பதிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை, திருமதி சிமியாம்பிள்ளை அவர்களையும் சிறப்பு விருந்தினர் கொத்தணி அதிபர் திரு. இரா. சின்னத்தம்பி, சமூகமணி கிருஷ்ணராசா ஆகியோரையும் அதிபர் வரவேற்று நன்றி செலுத்தினர்.

# எரிபொருள் கொள்வனவில் கஷ்டம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி வாகனச் சொந்தக் காரர்கள் தமது வாகனங்களுக்குரிய எரிபொருட்களை கொள்வனவு செய்வதற்குத் தினமும் பல மணி நேரம் சாவகச்சேரி பலநோக்குச் கூட்டுறவுச் சங்கத்திற்குரிய எரிபொருள் விற்பனவு நிலையத்தில் காத்திருக்க வேண்டியுள்ளது. எரிபொருள் விநியோகத்தில் சீரான ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப் படாமையே இதற்குக் காரணம் என்று வாகனச் சொந்தக்காரர்கள் கவலை தெரிவித்துள்ளதுடன் பலர் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபரிடம் இதுபற்றி முறைப்பாடும் செய்துள்ளனர்.


**ஹரன்** (யாழ். நகர்)
காலை 10-30
சிவாஜி-சரிதா
ராதா-ராஜீவ் **துணை**
(கலர்)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
காலை 10-30
விஜயன் - சத்தியகலா
**தனி மரம்**

**சாந்தி** யாழ். நகர்
காலை 10-30, 2-30
சிவாஜி — லட்சுமி
**தியாகம்**
(ஈஸ்ட்மென் கலர்)

**மனோகரா**
(யாழ்நகர்)
தினசரி மு. ப. 10-30
பி. ப. 2-00
ரஜனிகாந்த்-ஸ்ரீவித்யா
**பொல்லாதவன்**

**ராணி** (யாழ். நகர்)
காலை 10-30
கமலஹாசன் - அம்பிகா
**சகலகலா வல்லவன்**

**லிடோ** (யாழ். நகர்)
காலை 10-30
ரஜனிகாந்த்
**முரட்டுக் காளை**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
காலை 10-30
பிரதாப்— சோபா
**மூடுபனி**

**ராஜா** (யாழ்நகர்)
10-30, 1-30
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
விஜயகுமாரி, ஜெய்கணேஷ், லதா, நாகேஷ், சுபாஷினி
**அழகே உன்னை ஆராதிக்கிறேன்**
(புத்தம் புதிய வண்ணப் பிரதி)

**றீகல்**
10-30, 2-00, 4-30
**GIRL FROM INDIA**
காலை 10-30 மணிக் காட்சி மட்டும்
இக்காட்சி 12-30 க்கு முடிவடையும்.


# அகதிகளின் பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

கப்பல்களில் அகதிகள் வரும் போது பாதுகாப்புக் கருதிக் கடற்படையினரால் அகதிகளிடமிருந்து பொறுப்பேற்கபட்ட பேனுக்கத்தி, ஸ்குறூடிரைவர், முள்ளுக்கரண்டிகள் போன்ற சிறிய உலோகக் கருவிகள் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி முகாமைச் சேர்ந்த திரு. கே. ஜெயபாலசிங்கத்திடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி அவரிடம் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மண்ணெண்ணை ஒரு போத்தல் 10 ரூபாவுக்கு விற்பனை

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலுள்ள சில தனியார் கடைகளில் ஒரு போத்தல் மண்ணெண்ணை 10 ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் நெடுந்தீவுக்கு எண்ணை விநியோகிக்கப்படாமையினல் இந்த நிலை ஏற்பட்டிருப்பதாகவும் பல. நோ. கூ. சங்கம் எண்ணை தரும்படி யாழ். பெற்றோலியம் கூட்டுத்தாபன அதிகாரிகளை நேரில் சந்தித்தும் கடிதமூலமும் பல தடவைகள் கேட்டுக்கொண்டபோதும், நெடுந்தீவுக்கு எண்ணை வழங்குவதில் கூட்டுத்தாபனத்தின் யாழ். நிலையம் எவ்வித அக்கறையும் இன்றி இருப்பதாகவும், நெடுந்தீவு முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. என். இலட்சுமணராசா தெரிவித்தார்.

நெடுந்தீவுக்கு விநியோகிக்கும் மண்ணெண்ணையை உடன் வழங்குமாறும் அவர் யாழ். அரசாங்க அதிபரைக் கேட்டுக்கொண்டார். நெடுந்தீவில் தற்சமயம் நிலவும் தட்டுப்பாட்டை மையமாகக் கொண்டு தனிப்பட்ட வியாபாரிகள் மிகக்கூடுதல் விலைக்கு எண்ணையை விற்பது தவிர்க்கப்படவேண்டும் எனவும், விலைகளையும் தாங்கள் விரும்பியவாறு கூட்டிக்கொள்வதுடன் அளவுகளையும் குறைத்துவிடுகிறார்களென்றும் தெரிவிக்கப்பட்டது.

# நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கத்தில் அரிசி, சீனி கொள்ளை!

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கத்தின் மத்திய கிளையில் நேற்று முன்தினம் 12 மூடை அரிசி, சீனி ஒருமூடை உட்பட பிடவைகள்வேறும்சிலபொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டது.

இச்சம்பவம் இரவு 10மணிக்கும் 11 மணிக்கும் இடையில் நடைபெற்றதாகவும் கதவு உடைக்கப்படும் சத்தம் மிகப் பெரிய அளவில் கேட்டதாவும் எனினும் தாங்கள் அதனைப் பொருட்படுத்தாது இருந்துவிட்டதாகவும் அயலில் உள்ளவர்கள் கூறினர்கள்.

திருடப்பட்ட பொருட்கள் வண்டில்கள் அல்லது வேறு வாகனங்கள் மூலமே எடுத்துச் செல்லப்பட்டதாகவும் அறிய முடிகிறது.

இக்கொள்ளை தொடர்பாக சங்கப் பொதுமுகாமையாளர் திரு. இரா. தருமலிங்கம் தலைவருடன் தொடர்புகொண்டதை அடுத்து பொலிசாரிடம் புகார் செய்யப்பட்டதுடன் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய பலன்

ஆடி 26ம் திகதி
வியாழக்கிழமை
(11—8—83)

மேடம்: உடம்பை அலட்டிக்கொள்ளாமலே உயர் வழிக்கு வழிகாண்பீர்கள் மேலிடத்து உறவு உற்சாகத்தை அழிக்கும் பிதா வழிமூலம் தகுந்த உதவி கிடைக்கும்,

இடபம்: செய் தொழிலின் மூலம் சிறப்புக்கள் கிடைக்கும்: பெரியவர்கள் ஆசி அவசியம் உண்டு. போட்டா போட்டிகளில் வெற்றி உங்கள் பக்கம் விளையாட்டு வீரர் முதலிடத்தைப் பெறுவர்.

மிதுனம்: நிதிநிலையில் விரும்பத்தக்க முன்னேற்றம் காணப்படுகிறது. வணிகர்களாயின் அதிக ஆதாயத்தைப் பெறுவார்கள் புதுமையான காரியங்களில் மனதைச் செலுத்துவீர்.

கடகம்: முன்னேற்றப் பாதையில் இரும்புத்திரை தொங்கவிடப்படுகிறது. அதிக அலைச்சலுக்கும் இடமேற்படலாம், உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம் வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

சிங்கம்; முக்கியமான விடயங்களை இன்று பின்போடுவது விரும்பத்தக்கது, உள்வீட்டிலேயே உளவு வேலை நடைபெறலாம் பகைவர்களின் நடவடிக்கை இறுதிவரை பரம ரகசியமாகவே இருக்கும்.

கன்னி: வாழ்க்கை மலர் தூவிய மஞ்சமாகக் காட்சி அளிக்கும், கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும் காதல் விவகாரங்களுக்கு இடமுண்டு டாக்டர்கள் முன்னேற்றமடைவர்.

துலாம்: எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும் எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். வருமானத்தில் வீழ்ச்சி தென்படும். எதிர்பாராத விபத்துக்கு இடமுண்டு.

விருச்சிகம்: இதயத்தைத் தொடும் சம்பவங்கள் இடம்பெறும் சிலருக்கு புதிய வாகனம் கொள்முதல் செய்ய உகந்ததினம். மாதுருவழிச் சுகமும் கிடைக்கும். செல்வாக்குப் பெருகும்.

தனு: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்கள் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும். இறைநம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும். பொன்னுனதினம்.

மகரம்: ஏமாற்றத்தின் தாக்குதலால் அவதிப்படுவீர்கள் பூமிப்பிணக்குகளால் கவலை தோன்றக்கூடும். தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சி உருவாகும். சிறுபிணிக்கும் இடமுண்டு.

கும்பம்- பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பப் பிரச்னைகளில் சுமுகமானநிலை தென்படும். சுற்றூடலிலும் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும்.

மீனம்- பிரச்னைகள் மேலும் சிக்கலாகும். உணவுவிடயத்தில் பிரியக்குறைவு ஏற்படும். கூர்மையான ஆயுதங்களுடன் பழகாது இருக்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# சடலங்கள் மீட்கப்படவில்லை

(புலோலி)

பொலிகண்டியிலிருந்து மீன் பிடிக்கச் சென்று படகு கவிழ்ந்து கடலுக்குப் பலியான இரு மீனவர்களின் சடலங்கள் இன்னும் மீட்கப்படவில்லையென்று அறிவிக்கப்பட்டுள்ளது. தேடுதல் முயற்சி வெற்றியளிக்கவில்லையாம்.

6ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில் இரு மீனவர் சடலங்களும் மீட்கப்பட்டதாக வெளியான செய்தி தவறு என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


**யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி**

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சிட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சீட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

**குரொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.**

**05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.**

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA) போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்

தற்பொழுது விசேட சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கான விமானப் பிரயாண ஒழுங்கு யாவற்றுக்கும் உடன் விரையுங்கள்!

**CROSS TRAVEL SERVICES (PVT)LTD.**
Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor
BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

## மணிவாக்கு

நீ என்ன செய்ய முடியும் என்பதை உலகிற்குச் சொல்லிக் காட்டாதே, செய்துகாட்டு.

— நெப்போலியன்

## நமது நோக்கு

# பொருள் தட்டுப்பாடும் விலையேற்றமும்

நாட்டில் ஒரு நெருக்கடி, அல்லது அசாதாரண நிலைமை உருவாகும் போதுபொருட்களைப்பதுக்கி வைப்பதும், செயற்கையான தட்டுப்பாடுகளை உருவாக்கி விலைகளை அதிகரித்துக்கொள்ளைலாபம் அடிப்பது நம் நாட்டில் வர்த்தகர்கள் மத்தியில் ஒரு வழக்கமாகிவிட்டது.

ஒருசிலர் விதிவிலக்காக இருக்கலாம்.

பொதுப்பிரச்னை என்று வரும்போது சமூகத்தில் சகல தரப்பினருமே பாதிக்கப்படுகிறார்கள். அம்மாதிரி நிலைமையில் இருப்பதைப்பகிர்ந்து கொள்வதையும் வழமையான விலையில் தேவையானவர்களுக்கு அவை கிடைக்கச்செய்வதையும் ஒரு நடைமுறைப்பழக்கமாக்கிக் கொள்வது நல்லது.

போக்குவரத்துக்கஷ்டங்களால் கடந்த சில நாட்களாக அத்தியாவசியப் பொருட்கள் இப்பகுதிக்கு வந்து சேர்வதில் ஏற்பட்ட சங்கடங்களைப் பயன்படுத்திக்கொண்ட சமூகஉணர்வு அற்ற சிலர் விலைகளை திடீரென உயர்த்திவிட்டும் செயற்கைத்தட்டுப் பாடுகளை ஏற்படுத்தியும் லாபம் சம்பாதிக்க முற்பட்டனர்.

இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த யாழ்ப்பாண அரசாங்க அதிபரும் மற்றவர்களும் உடனடியாக செயல்பட்டு காரியமாற்றியது வரவேற்கத்தக்கது.

பொருள்களைப் பதுக்கும் நபர்மீதுகடும் நடவடிக்கை எடுக்க அரச அதிபர் ஏற்பாடுசெய்தது மட்டுமின்றி, அப்படியானவர்கள் பற்றி தகவல்தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும் என்றும் அறிவித்தார். இந்த ஏற்பாடு பெருமளவில் உதவியுள்ளது மறுக்கமுடியாதது. ஆனால் சில இடங்களில் சமய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி அன்றாடம் காய்ச்சிகளான ஏழைமக்களை சுரண்டும் நிலைமை இன்னமும் நீடிப்பது கவலையளிப்பதாகும்.

சமுதாய உணர்வு நமது மக்கள் மத்தியில் இன்னும் சரியாக ஏற்படவில்லை என்பதையே இது காட்டுகின்றது.

நெருக்கடி நிலைமைகளைக் கொள்ளை லாபத்துக்குப் பயன்படுத்திக் கொள்வது சமூகத்துரோகம் மட்டுமல்ல தெய்வ நிந்தனையுமாகும் என்ற வகையில் இவர்களை உணரவைப்பது சமூகப் பெரியார்களதும், சமயத் தலைவர்களதும் கடமையாகும்.

# யாழ். மண்டைதீவு

## பஸ் சேவை நடத்தக் கோரிக்கை

(வண்ணார்பண்ணை)

வடபகுதியில் அண்மையில் போக்குவரத்துச் சேவைக் குறைப்பு நடைபெற்றபோது நிறுத்தப்பட்ட மண்டைதீவு பஸ் சேவையைதொடர்ந்துநடத்துமாறு மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கம் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பணிப்பாளரைக் கேட்டுள்ளது.

இந்த பஸ்சேவை நிறுத்தத்தால் மண்டைதீவு தபால் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், சீசன் டிக்கட்டுகள் பெற்றவர்களும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனியான ஒரு பாதையான மண்டைதீவு சேவை நிறுத்தப்பட்டது தவறுதலானதாகவே கருதமுடிகிறது. இக்கிராமத்திற்கு ஊடாக வேறு பஸ்வண்டிகள் செல்வதாயின் இதை நிறுத்தியிருக்கலாம். தனியான ஒருபாதையின் சேவை நிறுத்தப்பட்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்பை உணர்ந்து இச் சேவையை உடன் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மறுமலர்ச்சி இயக்கம் அந்த வேண்டுகோளில் தெரிவித்துள்ளது. இக்கிராமத்திலிருந்து டிப்போவுக்கு வேலைக்குச் செல்லும் போக்குவரத்துச்சபை ஊழியர்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பாடசாலை மாணவர்களும், தபால்சேவையும் முக்கியமாக பாதிப்புக்குள்ளாகியிருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வண்-நிரு.)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983ம்ஆண்டு ஆகஸ்ட்மாதம்11-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O. Box: 49, Telephone: 22389—24126.

## தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி மகோற்சவம் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மகோற்சவம் இன்று 11ந் திகதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 12 தினங்களுக்கு இவ் வருடாந்த உற்சவ திருவிழாக்கள் நடைபெறும்.

பிரதான உற்சவ விபரங்கள் வருமாறு: இன்று 11ந் திகதி கொடியேற்றம், 19ம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத் திருவிழா, 20ந் திகதி சனிக்கிழமை சப்பரத் திருவிழா, 21ந் திகதி காலை 9 மணி தேர்த் திருவிழா, 22ந் திகதி காலை 8 மணி தீர்த்தவிழா. (கி)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பன்னலை திருசீச்சிரம் ஸ்ரீ சுப்பிரமணிய ஆலய புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் ஆகஸ்ட் 19ம் திகதி நடைபெறும். (சூ)

## உற்சவம்

[பண்டத்தரிப்பு]

பிரான்பற்று பெரியவளவு முருக மூர்த்தி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 13ம் திகதி சனிக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம் மாதம் 22ம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தமும் நடைபெறும்.

(அ)

## திருப்பணிச் சபை

(புலோலி)

கரவெட்டி கிழக்கு வன்னியப்பிள்ளையார் ஆலய திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன. இதற்கான திருப்பணிச்சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்திருப்பணிச் சபையின் தலைவராக இ. சின்னத்தம்பியும் செயலாளராக மா. முருகேசுவும், பொருளாளராக இ.சிதம்பரமும் செயற்குழு உறுப்பினர்களாக சி.கதிர்காமு, பு. கிருஷ்ணபிள்ளை சி. சிவலிங்கம், சி. சுப்பிரமணியம் க. கந்தையா ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்

(கி)

### விரைவில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அவை அரசுடமையாக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்தவற்றைப் புதுப்பிக்க 'புனர்நிர்மாண அதிகார சபை' என்ற அமைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதன் தலைவராக முன்னாள் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ஏ. பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா இந்த அமைப்புவேலைகளை மேற்பார்வையிடுவார். (கி)

### நுவரெலியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டது. வவனியாவில் அகதிகள் நன்கு வரவேற்கப்பட்டு, அவர்களுக்கு ஏற்ற வசதிகளை செய்துகொடுத்ததை அகதிகள் நன்றியுடன் நினைவுகூர்ந்தனர்.

கைதடியில் அகதிகள் இறக்கப்பட்டு அங்கு தங்க வசதி செய்து கொடுக்கப்பட்டது.

## பகலில் மட்டும் படக்காட்சிகள்

(சுண்டிக்குளி)

தற்போது நாட்டுநிலமை சீரடைவதைத் தொடர்ந்து யாழ். நகரில் திரைப்பட காட்சிகள் பகலில் மட்டும் நடைபெறுகிறது. சில தனியார் கல்வி நிலையங்களும் பகலில் வகுப்புக்களை நடாத்த முன்வந்தும், மாணவர் வரவு குறைவாகவும், சில மாணவர்கள் வகுப்புகளுக்கு வராதும் இருப்பதாகத் தெரிகிறது.

## இயங்காத மணிக்கூடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்புத் தபால் அலுவலகத்திலுள்ளமணிக்கூடு கடந்த சில தினங்களாகப் பழுதடைந்த நிலையில் இயங்காது இருப்பதால்இங்கு கடமையாற்றும் ஊழியர்களும், பொதுமக்களும், சரியான நேரம் பார்க்க முடியாது மிகவும் சிரமமடைகின்றனர்.

(அ)

# மோட்டார்சைக்கிள் விபத்தில் இருவர் ஸ்தலத்தில் பலி!

(சுழி-பண்டத்தரிப்பு)

வேகமாக வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், வீதி ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த மாட்டு வண்டி ஒன்றுடன் மோதியதால் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்த இருவர் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.

தொல்புரத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தில் உயிரிழந்த இருவரும் யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்களாவர். (அ)

# இடம்பெயர்ந்து வந்த முஸ்லிம் பாடசாலை ஆசிரியருக்கு வசதி!

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் நடந்த கலவரங்களினால் இடம்பெயர்ந்து வந்துள்ள முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், தாம் வதியும் பகுதிகளிலுள்ள கல்வித் திணைக்களத்துக்குச் சென்று அறிவிக்கவசதி செய்யப்பட்டுளளது. இந்தத் தகவலை இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு.மகாசிவம் தெரிவித்தார். கல்வி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு, நேற்று ஆரம்பமான முஸ்லிம் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் அந்தந்த இடங்களுக்குச் செல்லமுடியாதவர்களுக்கு இங்குள்ள கல்வித் திணைக்களத்துக்குச் சென்று அறிவிப்பதற்கு வசதி செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அமைச்சருடன் தொடர்பு கொண்டு, இவர்களுக்கு இந்த வசதியை செயலாளர் செய்திருப்பதாகத்தெரிவித்தார்.

அடுத்து எப்போது பாடசாலை செல்ல வேண்டுமென்பது குறித்து பின்னர் தெரிவிப்பதாகவும் திரு.மகாசிவம் தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்ட மக்களின் நிலை

(சுண்டிக்குளி)

கொழும்பு அதிமேற்றிராணியார் அதிவந் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ சகல கத்தோலிக்க குருமாருக்கும் ஒரு சுற்று நிருபம் அனுப்பியுள்ளார். அவை ஞாயிறு பூசை நேரம் வாசிக்கும் படி பணித்துள்ளார். அச்சுற்று நிருபத்தில் நாட்டில் அண்மையில் நடைபெற்ற வன்செயல்களைப்பற்றியும், அவற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் நிலை, அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய பணி முதலியவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

### 10 நாட்களில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் வாகனங்கள் மூலமும் இப்போது அகதிகள் வரத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாற இறுதியுடன் கொழும்பிலுள்ள முகாம்களில் அகதிகள் தொகை வெகுவாகக் குறைந்துவிடுமென்றும், ஒரே முகாமுக்குச் சகல அகதிகளும் மாற்றப்படுவார்கள் என்றும் உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது,

கைதடியில் ஒரு முகாமில் சுமார் 75 பேர் (யாழ்ப்பாணப் பகுதியில் இடமில்லாதவர்கள்) தங்கியுள்ளார்கள்.

## சிறந்த சாரதி தெரிவுப் போட்டி

(திருகோணமலை)

இலங்கை மோட்டார் வாகனச் சங்கம் அனைத்திலங்கை ரீதியில் சிறந்த சாரதியைத் தெரிவுசெய்யும் போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளது. மோட்டார் சாரதிகள் மத்தியில் நல்ல பாதுகாப்பான, ஆரோக்கியமான சாரத்தியத்தை வளர்ப்பதே இப் போட்டியின் நோக்கமாகும்.

இச் சாரதிப் போட்டி வேகத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல. ஒரு சாரதியின் வாகனத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்! நிலைமைக்கேற்ப உரிய தீர்மானம் எடுத்தல், வாகனத்தை கையாளும் முறை, வீதி ஒழுங்குகளை அனுசரித்தல், சாரதியின் எதிரொலிகள் ஆகியவை இப் போட்டிகளில் அவதானிக்கப்படும் என்று ஒழுங்காளர்கள் அறிவித்துள்ளனர். கார்ச் சாரதிகள், சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஓட்டிகளும் இப் போட்டியில் பங்குபற்றலாம்.

## இளம் தாய் கடத்தப்பட்டார்!

(யாழ்ப்பாணம்)

நள்ளிரவில் இளம் தாயொருவர் மூவரினால் கடத்திச்செல்லப்பட்டார்.

நாரந்தனையில் நடந்த இச் சம்பவம் பற்றி ஊர்காவற்றுறை பொலிசில் முறையிடப்பட்டுள்ளது. இச்சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:

27 வயதான இளம் தாய் ஒருவர் நித்திரையிலிருந்த சமயம் கத்தி, பொல்லு போன்ற ஆயுதங்களுடன்வந்த மூன்றுபேர் அங்கிருந்த வயோதிப தகப்பனைத் தாக்கிவிட்டு கத்தியைக் காட்டி பயமுறுத்தி அத் தாயை தூக்கிச் சென்றனராம். இவர்களது கூக்குரல் கேட்டு அருகிலுள்ள தேவாலயத்தில் காவலுக்கிருந்த அவரது சகோதரர் துரத்திச் சென்று கூக்குரலிடவே வாலிபர்கள் தாயை விட்டுச்சென்றனராம். நினைவிழந்த நிலையிலிருந்த தாயை சகோதரர் மீட்டார். 45 நாள் வயதான இவரது குழந்தை எதுவித காயமுமின்றி தப்பியது.

## தண்ணீரில் நனைந்த சீனி

### பாவனையாளர் புகார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள பல வர்த்தகநிலையங்கள் சீனிக்குள் தண்ணீர் கலந்து நனைந்த சீனியை விற்பனை செய்கின்றன என பாவனையாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர். இதுசம்பந்தமாக சம்பந்தப்பட்டஅதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இவர்கள் கோருகின்றனர். நனைந்த சீனி நிறைகூடி நிற்பதால் இவர்கள் இந்த மோசடியை செய்வதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

### வவனியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் பல தனியார் வாகனங்களில் இன்று வவனியாவிற்கு அகதிகள் வந்துசேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சிவானந்த குருகுலம்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து வசதிகள் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலவச சமஸ்கிருத வகுப்புக்கள் சனிக்கிழமை மீண்டும் ஆரம்பிக்கப் படவுள்ளதாக சிவானந்த குருகுலநிர்வாகி அறிவித்துள்ளார்.